**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 210/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | செல்வம் |
| Father's Name/Husband Name: | ஜீவானந்தம் |
| Village : | ஒகலூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 50 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர் . எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார். எதிரிகளும் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார்கள். எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ யார் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 22.03.2021ம் தேதி 1ம் எதிரி வாதியின்

இடத்தில் குச்சி நட்டு இருந்தார் என்றும். அது சம்மநத்மான இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு மாலை 5.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் அ.சா.ன் வீட்டிற்கு முன்பாக சென்று அவரை கெட்ட வார்த்தையால் திட்டி, 2ம் எதிரி வாதியின் மகனை சட்டையை பிடித்து கைகளால் அடித்ததாகவும், சண்டையை தடுக்க செனற் வாதியின் மகளை 2ம் எதிரி முடியை பிடித்து கீழே தள்ளிவிட்டதாகவும் போலிசாரி விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3ம் எ திரி அ.சா.3 கீழே தள்ளி நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், மற்ற எதிரிகள் அ.சா.1 ஐ அடித்ததாகவும், மூன்று எதிரிகளும் ஆயுதங்களை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று அ.சா.1ஐ மிரட்டியதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதற்காக அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.